**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 188/2019**

நாள்: 16.06.2026.

பெயர்: காசிநாதன் (வா.சா.1) த/பெ: அருணாசலம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

தாவா 1 வது அயிட்ட சொத்து விவரம் சரியல்ல என்றால் தவறு, சரியாக தான் உள்ளது. தாவா 1, 2 வது அயிட்டம் முழுவதும் ஆதியில் அழகமுத்து படையாட்சி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா 1 அயிட்ட சொத்தானது பழைய நத்தம் சர்வே எண்.79 ல் 3 ஏக்கர் 76 செண்டில் கட்டுப்பட்டது என்றால் சரிதான், ஆனால் 1வது அயிட்ட சொத்து முழுவதும் அதில் கட்டுப்பட்டது அல்ல. பழைய சர்வே எண்.79 என்பது புதிய சர்வே எண்கள்.343/4 மற்றும் 343/3 என்று மாறியுள்ளது என்றால் சரிதான். மேற்படி புதிய சர்வே எண்கள். 343/4 மற்றும் 343/3 ஆகியவற்றின் கூடுதல் விஸ்தீரணம் 7.5 செண்ட் என்றால் சரியல்ல. சர்வே எண்.343/4, 343/3 ஆகிய நிலங்களுக்கு மேல்புறம் ராஜமாணிக்கம், ராஜேந்திரன் ஆகியோருக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்கள்.343/4, 343/3 மனைக்கு தென்புறம் வடக்கு வீதி உள்ளது. சர்வே எண்கள்.343/4, 343/3 முழுவதும் அழகமுத்துக்கு பாத்தியம் என்றால் சரியல்ல, 5 செண்ட் மட்டும் தான் அவருக்கு பாத்தியம். அழகமுத்துவிற்கு பிறகு சர்வே எண்கள்.343/4, 343/3 ஆகியன அவரது வாரிசுகளான சின்னதம்பி, முத்துசாமி ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் கீழ்புறம் முத்துசாமிக்கும், மேல்புறம் சின்னதம்பிக்கும் ஆளுக்கு தலா 1 செண்ட் மட்டுமே பாத்தியம். சர்வே எண்கள்.343/4, 343/3 ஆகியன முழுவதுமே முத்துசாமி மற்றும் சின்னதம்பி ஆகியோருக்கு மட்டும் பாத்தியம் என்றால் சரியல்ல. சர்வே எண்.343/4 ல் 14 லிங்ஸ் அகலம் 53 லிங்ஸ் நீளம் என்ற அளவு கொண்ட நிலத்தை மட்டும் எனது தந்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது தந்தை கிரையம் வாங்கும்போது 343/4 என்ற சர்வே எண்ணின் பழைய சர்வே எண்ணான 79 யை கண்டுதான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது தந்தை கிரைய

பெற்ற சொத்தை கிரைய ஆவணத்தின் படி அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. சின்னதம்பி மகன் சாமிதுரை, சாமிதுரை மகன் சௌந்தராஜன், சின்னதம்பி மகன் சிவசாமி மற்றும் அவரது மகன் இளங்கோவன் ஆகியோர் சேர்ந்து என்னுடனும் எனது தம்பியுடனும் 14.08.1985 ல் பரிவர்த்தனை பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி 14.08.1985 ல் பரிவர்த்தனை ஆவணத்தில் ஏற்கனவே கிரையம் பெற்ற இடத்தை தான் நாங்கள் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல, அதன் பக்கத்து இடத்தை தான் வாங்கியுள்ளோம். 14 லிங்ஸிற்கு 53 லிங்ஸ் என்பது ½ செண்ட் தான் வரும் என்றால் சரியல்ல, 1 செண்ட் ஆகும். நத்தம் சர்வே எண்.79 ல் நாங்கள் மொத்தமாகவே 1 செண்ட் மட்டும் தான் கிரையம் மற்றும் பரிவர்த்தனை வழியாக பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. சர்வே எண்.343/3, 343/4 ஆகியவற்றில் உள்ள சொத்துக்கள் முழுவதும் அழகமுத்துவின் மகன்களான சின்னதம்பி, முத்துசாமி ஆகியோருக்கு மட்டும் தான் பாத்தியம் என்றால் சரியல்ல. சின்னதம்பிக்கு சாமிதுரை, சிவசாமி என்ற மகன்கள் என்றால் சரிதான். முத்துசாமிக்கு குணசேகரன் மட்டும் தான் மகன் என்றால் சரிதான். குணசேகரனின் மகன் தான் பிரதிவாதி வெங்கடேசன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் எனக்கு 400 சதுரடி மட்டும் தான் பாத்தியம் என்றாலும், நான் கூடுதல் அளவிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. சர்வே எண்கள்.343/3, 343/4 ஆகியவைகளில் எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சர்வே எண்கள்.343/3, 343/4 ஆகியவற்றில் எனக்கு நிலம் பாத்தியப்பட்டிருந்தால் நான் பரிவர்த்தனை ஆவணம் ஏற்படுத்தி கொண்டிருக்க மாட்டேன், பாத்தியம் இல்லாததால் தான் பரிவர்த்தனை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. எனது தந்தை கிரையம் பெற்ற வா.சா.ஆ.10 ல் கொலையனூர் கிராம நத்தம் ரீ சர்வே எண்.79 நத்தம் புறம்போக்கில் 3 ஏக்கர் 76 செண்ட். ராஜவீதிக்கு வடக்கு, தங்கள் மனைக்கு மேற்கு, சாமிதுரை படையாட்சி மனைக்கு கிழக்கு, கீழ்மேல் வீதிக்கு தெற்கு இதற்குட்பட்ட கீழ்மேல் 14 லிங்ஸ் தென்வடல் 53 லிங்ஸ் உள்ள மனையும், வா.சா.ஆ.2 பரிவர்த்தனையில் நானும், எனது தம்பியும் பெற்ற சொத்தான

வா.சா.ஆ.2ல் உள்ள சொத்து விவரத்தில் கண்டுள்ள நத்தம் சர்வே எண்.79 திட்டம் 3 ஏக்கர் 76ல் 1வது பார்ட்டி இடத்திற்கு மேற்கு, தெற்கு, ராஜமாணிக்கம் நிலத்திற்கு கிழக்கு, வீதிக்கு வடக்கு இதில் கீழ்மேல் ஜாதியடி 10, தென்வடல் ஜாதியடி 40, 400 சதுரடி காலிமனையும் ஒரே நிலத்தை தான் குறிக்கிறது என்றால் சரியல்ல. சர்வே எண்கள்.343/3, 343/4 ஆகியவற்றின் மொத்த விஸ்தீரணம் 7.5 செண்டில் எங்கள் தந்தை கிரையம் பெற்றதும், நாங்கள் பரிவர்த்தனையின் படி பெற்றதும் சேர்த்தாலே சுமார் 1.5 செண்ட் மட்டும் தான் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

ஒப்பம்/அ.காசிநாதன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.